கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமே முதன்மையான திட்டம்!

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

கிருஷ்ணகிரி, செப். 27-

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் அனைத்துத் துறைகள் சார்பில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், தி.மு.கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களிலேயே முதன்மையான திட்டம், "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் அனைத்துத் துறைகள் சார்பில் நடைபெறும் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.9.2023) கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள நான் முதல்வன், இல்லம் தேடிக் கல்வி போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த வேண்டும். அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு தரமான சிகிச்சை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதியதாக தொடங்கி அவற்றிற்கு வங்கிக் கடன் வழங்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக அளவில் விளையக் கூடிய காய்கறிகள், மா, பூ உற்பத்திகளை அதிகரிக்கவும், அவற்றை பாதுகாப்பதற்கு குளிர்பதனக் கிடங்குகளில் உரிய நேரத்தில் விவசாயிகள் விற்று இலாபம் பெறுவதற்கும், தமிழக அரசு அறிவித்த முத்திரை பதித்த திட்டங்களை தொய்வின்றி செயல்படுத்த அரசு அலுவலர்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். அரசுத்துறை அலுவலர்கள் அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக இருந்து அனைத்து நலத்திட்டங்களும் மக்களுக்கு சென்றுசேர முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு ஏழை, எளிய மக்கள், விவசாயிகள், பெண்கள், படித்த இளைஞர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில், மக்களைத் தேடி மருத்துவம், நகரப்பேருந்துகளில் மகளிருக்கு இலவச பேருந்து வசதி, இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம், விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், நகைக் கடன் மற்றும் பயிர்கடன் தள்ளுபடி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுதல், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் என பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கு எல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல் வடிவம் கொடுத்து வருகிறது. பெண்ணுரிமை, பெண்கள் முன்னேற்றம் என்று வருகிற போது, பெண்களின் முன்னேற்றத்துக்கான முட்டுக் கட்டைகள் என்னென்ன என்று தந்தை பெரியார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பெண்கள் முன்னேற்றத்துக்கான அந்த முட்டுக்கட்டைகளை நமது அரசு சிறப்பான முறையில் அகற்றி வருகிறது. பெண்கள் முன்னேற்றம் கலாச்சார ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று பெரியார் சொன்னார். இந்த மூன்று தடைகளையும் நீக்கினால் போதும் பெண்கள் சுதந்திர மாக வாழக் கூடிய நிலை ஏற்பட்டு விடும் என்று பெரியார் அவர்கள் சொன்னார்கள்.

பெண்ணுரிமைக்கான குரல்

பெண்கள் முன்னேற்றத் துக்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் பணக்காரன் ஏழை அடிமைத்தனத்தை விட, மேல் ஜாதி கீழ்ஜாதி அடிமைத்தனத்தை விட, முதலாளி தொழிலாளி அடிமைத் தனத்தை விட மோசமானது இந்த ஆண்-பெண் அடிமைத்தனம் என்று கூறினார். அதிலும் கொடுமையானது இந்த விதவை கொடுமை. வரதட்சணை கொடுக்கும் வழக்கம் பல பெண்களின் வாழ்க்கையை சீரழித்தக் கொடுமையாக இருந்தது. அதோடு மட்டுமல்ல, பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது. பெண்களுக்கு படிப்புத் தேவையில்லை. குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும் தான் பெண்களுக்கு வேலை. இப்படி தான் நம்முடைய சமுதாயம் ஒரு காலத்தில் இருந்தது. இது எல்லாத்தையும் எதிர்த்து பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தது நம்முடைய திராவிடல் மாடல் அரசு.

நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், அவர்களைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், மகளிர் முன்னேற்றத்துக்கான திட்டங் களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். நமது திராவிட மாடல் அரசு செய்த பிரச்சாரத்தின் காரணமாக இப்போது விதவைக் கோலத்தில் எந்தப் பெண்களும் இல்லாத நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. விதவை என்ற சொல்லையே ஒழித்து, கைம்பெண் என மாற்றியவர் நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்.

இதுபோன்ற திட்டங்கள் எல்லாம் கலாச்சார ரீதியாக முடக்கப்படும் பெண்களை முன்னேற்றுவதற்கான நமது திராவிடல் மாடல் அரசின் திட்டங்கள். இது எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போல் நமது பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த சட்டம் தான் இன்று பரவலாக நடைமுறையில் இருக்கிற சுயமரியாதை திருமணச் சட்டம். இரண்டாவதாக, சட்ட ரீதியாகப் பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை ஒரு தாய் வயிற்றில் பிறந்தாலும், ஆண் பிள்ளைக்கு மட்டும் தான் அப்பா சொத்திலே உரிமை இருக்கிறது. பெண் பிள்ளைக்கு சொத்திலே உரிமை கிடையாது என்கிற நிலை தான் சட்ட ரீதியாக இருந்தது. ஆனால், நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது தான், தந்தை சொத்தில் பெண்களுக்கு சம உரிமை உண்டு என்று ஒரு 30 வருடங்களுக்கு முன்பே இதற்கான சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே உரிமைக் கிடைத்திருக்கிறது. இதற்கு காரணம் நமது திராவிட மாடல் அரசு கொண்டு வந்த சட்டம் தான். அடுத்தாக, பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக் கூடிய முட்டுக்கட்டைகள் ஒரு பெண் சிறுமியாக இருக்கும்போது, பணத்திற்காக தனது அப்பாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காக கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்த பெண் வயது முதிர்ந்த காலத்தில் பணத்திற்காக தனது மகனை எதிர்பார்த்திருக்க வேண்டும். இப்படி தான் இருக்கிறது பெண்களின் நிலை. இந்த நிலைமை மாறி, பெண்கள் ஆண்களுக்கு சமமாக வளர வேண்டுமானால் அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பும் கல்வியைக் கற்க வேண்டும். தங்கள் அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற வேலையிலே அமர வேண்டும்.

பெண் கல்விக்கு முக்கியத்துவம்

எனவே தான், நம்முடைய அரசு பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பள்ளியில் இருந்து கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாதம் 1000 ரூபாய் வழங்குகிறது. படிப்பதற்காக அல்லது வேலைக்காக பெண்கள் பயணம் செய்வதற்கு வாய்ப்பாக மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்துப் பயணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 31 ஆயிரம் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் காலை சிற்றுண்டித் திட்டம் மிக முக்கியமானது. 17 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். பெண்களுடைய சிரமத்தை குறைக்கக் கூடியத் திட்டம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். காலையிலே எழுந்து வேலைக்கு செல்லக் கூடிய பெண்களின் சிரமத்தை இந்தத் திட்டம் போக்கியிருக்கிறது.

பெண்களுக்கு முதலமைச்சர் கொடுத்த தாய் வீட்டுச் சீர்

கிராமப்புறங்களில் இருக்கிற பெண்களின் பொருளாதார முன்னேற்றத்துக்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர் கள் கொண்டுவந்த திட்டம் தான் மகளிர் சுயஉதவிக் குழுத் திட்டம். இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, இன்றைக்கு பல கோடி பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மூலம் கடன்பெற்று சுயமாக தொழில் செய்து வருகிறார்கள். இதுவரை நமது திராவிட மாடல் அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களி லேயே முதன்மையானது என்று சொல்லக் கூடிய திட்டம் தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

இந்தத் திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் வைத்திருக்கும் பெயர் தான் இதிலே முக்கியமானது. இந்த திட்டம் மகளிருக்கான உரிமை என்பதால், இதற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று பெயர் வைத்துள்ளார்கள். எழுத்தாளரும், ஆராய்ச்சியாளருமான தொ.பரமசிவன் அவர்கள் 'அறியப் படாத தமிழகம்" என்ற ஒரு புத்தகத்தில் திராவிடப் பண்பாடுகளில் தாய்மாமன் உறவு என்பது மிக முக்கியமானது என்றும், திராவிடப் பகுதிகளாக இருக்கிற தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநிலங்களில் தான் தாய் மாமன் உறவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார். நம்முடைய வழக்கத்துல தாய் மாமன் சீர்னு சொல்வாங்க. அதாவது கல்யாணமாகிப் புகுந்த வீட்டுக்கு போகிற ஒவ்வொரு பெண்ணுக்கும் அவங்களோட தாய் வீட்டுல இருந்து எடுத்துட்டு வர்ற சீர் அது. தாய் வீட்டுல வர்ற சீரை தான் பெண்களும் பெருமையா நினைப்பாங்க.

நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற ஒவ்வொரு பெண்ணுக்கும் அண்ணனாக இருந்து சீர் செய்திருக்கிறார். அது தான் இந்த கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். இது உங்கள் தாய் வீட்டு சீர். இது உங்களுடைய உரிமை. பெண்களுடைய உழைப்புக்கு ஓர் அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது அங்கீகாரம் கொடுத்திருக்கிறார். உங்களுடைய மகனாக, சகோதரனா இருந்து இதைப் பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்கள் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல் பொது வாழ்க்கையிலும் பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போது தான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்தி பெற முடியும்.

இப்போது, உள்ளாட்சிப் பதவிகளில் 50 சதவீதம் பெண்கள் வந்திருக்கிறார்கள். சென்னை மேயர், தாம்பரம் மேயர், கோயம்புத்தூர், மேயர், கிருஷ்ணகிரி நகர மன்றத் தலைவர் என்று உயர்ப்பதவிகளில் எல்லாம் பெண்கள் வந்திருக்கிறார்கள். இந்த சாதனையை நடத்திக் காட்டியது நமது திராவிட மாடல் அரசு. பெண்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவுப் பெற்றவர்களாக இருப்பது தான் பெண்ணுரிமைக்கான அடித்தளம். தந்தை பெரியார் அவர்கள் சொன்னது போல மகளிர் நீங்கள் அனைவரும் முற்போக் காக சிந்திக்க வேண்டும். சுதந்திரமாக சிந்திக்க வேண்டும். அப்போது தான் உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்களாக இருப்பார்கள்.

எனவே, மகளிர் நிறைய படிக்க வேண்டும், முற்போக்காக சிந்திக்க வேண்டும். அப்போது தான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் முன்னேற முடியும். ஆண்களை விட பெண்கள் தான் தங்களுடைய வருமானத்தில் பெரும்பகுதியை தங்கள் குடும்பப் பராமரிப்புக்காக செலவிடுகிறார்கள். எனவே, பொருளாதா ரத்தில் பெண்கள் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் மிகப்பெரிய பலனைத் தரும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுகோலாக அமையப் போகிறது

மேலும், மகளிருக்கு மகுடம் சூட்டும் வகையில் இந்திய ஒன்றியமே திரும்பி பார்க்கிற திட்டமான மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அண்ணா பிறந்த நாளையொட்டி, செப்டம்பர் 15 அன்று காஞ்சிபுரத்தில் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர்கள் பயன்படுகிற இத்திட்டத்தை ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டுகிறது. கிருஷ்ண கிரி மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 4 இலட்சத்து 58 ஆயிரத்து 527 மகளிர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் தகுதியானவர்களுக்கு இம்மகளிர் உரிமைத் தொகை அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட த்திற்கு விண்ணப்பித்து, நிராகரிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கான காரணங்கள் அவர்களுடைய கைபேசி எண்ணிற்கு குறுந்தகவலாக அனுப்பப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இசேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும். இத்திட்டத்தில் தகுதியான மகளிர் எவரும் விடுபடக் கூடாது என்பதே நமது திராவிட மாடல் அரசின் நோக்கமாகும். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் ஒவ்வொரு மகளிரின் வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுதலாக அமைய போகிறது.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சென்னப்பள்ளி ஊராட்சியில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் 10 ஏக்கர் பரப்பளவில் ரூ.26.82 கோடி மதிப்பீட்டில் 5 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட காய்கறி முதன்மைப் பதப்படுத்தும் கிடங்கு மற்றும் குளிர்ப்பதனக் கிடங்கு கட்டுமானப் பணியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பதப்படுத்தும் கிடங்கு மற்றும் குளிர்பதனக் கிடங்கின் கட்டுமானப் பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து, விவசாயிகளின் செயல்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, தொழில்துறை வளர்ச்சியில் தமிழ்நாட்டை இந்திய ஒன்றியத்தில் முதன்மையான மாநிலமாக மாற்றும் வகையில், சூளகிரி, மருதாண்டப்பள்ளி ஊராட்சியில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சார்பில் வருங்கால நகர் திறன் பூங்கா (SIPCOT Future Mobility Park) அமையவுள்ள இடத்தினை ஆய்வு மேற்கொண்டு, அதன் வரைபடத்தினைப் பார்வையிட்டார். இப்பூங்கா 300 ஏக்கர் பரப்பளவில் ரூ.3 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் ரூ.2 ஆயிரம் கோடி முதலீடுகளை ஈர்க்கக்கூடிய வகையிலும், 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது.

பின்னர், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், குந்தாரப்பள்ளி ஊராட்சி, குமரன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் 500 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 பெறுவதற்கான ஏ.டி.எம். அட்டைகள் மற்றும் தகவல் கையேடுகளை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக, அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக, 50 விவசாயிகளுக்கு 17 இலட்சத்து 84 ஆயிரத்து 44 ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் இருபொருள்களும், வேளாண் பொறியியல் துறை சார்பாக 4 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளும், வருவாய்த்துறை சார்பாக 64 பயனாளிகளுக்கு பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்களும், 41 பயனாளிகளுக்கு ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு மனைப் பட்டாக்களும், 7 பயனாளிகளுக்கு ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் விபத்து நிவாரண காசோலைகளும், மாற்றுத்திறனாளி கள் நலத்துறை சார்பாக 35 மாற்றுத்திறனாளிகளுக்கு 9 இலட்சத்து 37 ஆயிரத்து 516 ரூபாய் மதிப்பீட்டில் திருமண உதவித்தொகை, ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்திப் பொருட்கள் விற்பனை மையம் முன் வைப்பு நிதி மானியம், இலவச திறன் பேசி, சுயதொழில் தொடங்க வங்கிக்கடன் மானியமும்,

கூட்டுறவுத்துறை சார்பாக 1,484 பயனாளிகளுக்கு 11 கோடியே 29 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பயிர்க்கடனுதவிகளும், மகளிர் திட்டம் சார்பில் 1,356 பயனாளிகளுக்கு 16 கோடியே 95 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக் கடனுதவிகளும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ், 42 பயனாளிகளுக்கு 24 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தொழில் கடனுதவிகளும், மாவட்ட முன்னோடி வங்கிகள் சார்பாக 200 பயனாளிகளுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பில் வங்கிக் கடனுதவிகளும், தாட்கோ மூலம் 6 பயனாளிகளுக்கு 36 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தொழில் கடனுதவிகளும், மாவட்ட தொழில் மையம் சார்பாக 4 பயனாளிகளுக்கு 70 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தொழில் முனைவோருக்கான சிறப்பு கடன் தொகை என மொத்தம் 3,293 பயனாளிகளுக்கு 41 கோடியே 54 இலட்சத்து 41 ஆயிரத்து 516 ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தொடர்ந்து, மகளிர் சுயஉதவி க்குழுக்களின் தயாரிப்பில் உருவான பொருட்களின் கண்காட்சியினைப் பார்வையிட்டார்.

மஞ்சப்பை விழிப்புணர்வு!

பின்னர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டுத் துறை சார்பாக, பிளாஸ்டிக் பயன்பாட்டை முற்றிலும் தடுக்கும் பொருட்டு, மஞ்சப்பை விழிப்புணர்வினைத் தொடங்கி வைத்து, பொதுமக்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்களுக்கு மஞ்சப்பைகளை வழங்கினார்.

தொடர்ந்து, கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 20 அரசு பள்ளிகளில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 20 கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ.40 இலட்சத்திற்கான காசோலையை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்வுகளின் போது, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ.செல்லக்குமார் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய்.பிரகாஷ் (ஓசூர்), மதியழகன் (பர்கூர்), ராமச்சந்திரன் (தளி), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திருசுகவனம், செங்குட்டுவன், முருகன், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைச் செயலாளர் டாக்டர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கே.எம். சரயு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சரோஜ்குமார் தாகூர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.9.2023) முகாம் அலுவலகத்தில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், கானா நாட்டில் நடைபெறவுள்ள 66வது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்வதையொட்டி சந்தித்தார். உடன் சட்டப்பேரவைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன் உள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்ட விழா ஏற்பாடுகள் குறித்து வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.உடன் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி,மேற்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.எம்.முருகன், மேற்கு மாவட்ட துணை செயலாளர் ஆ.மணி,பாலக்கோடு பேரூராட்சி தலைவர் பி.கே.முரளி மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

தி.மு.கழகத்தை தன் எழுத்தாலும், பேச்சாலும் அறிவியக்கமாக உருவாக்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், கழகத்தின் ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு பொறுப்பை கழகத் தலைவர் அவர்கள் ஒப்படைத்துள்ளார்கள். அந்த வகையில், தி.மு.க. இளைஞர் அணிக்கு, 'தொகுதிக்கு ஒரு நூலகம் அமைக்க வேண்டும்' என அறிவுறுத்தியதற்கொப்ப, தமிழ்நாட்டிலேயே முதல் தொகுதியாக, கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். கிருஷ்ணகிரி தொகுதியைச் சேர்ந்த பள்ளி –கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இந்நிகழ்வில் அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் உள்ளிட்ட முன்னணியினர் உடன் உள்ளார்கள்.